**அதுரலிய பிரதேச சபை**
**மாத்தறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 ஜுலை 15 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 நவம்பர் 25 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அதுரலிய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

கணக்குகள் தயாரிக்கும் போது நடைமுறைபடுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) பிரதேச சபைக்கு உரித்தான கோரலகெஹேன எனும் காணியின் பெறுமதியை கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை தாபிக்கும் போது சுவீகரிக்கப்பட்ட சபை சொத்துக்காக அகுரஸ்ஸ பிரதேச சபைக்கு செலுத்த வேண்டிய பணம் ரூபா 84,933 தொகையால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டன.

(இ) சபை வளாகத்தில் வாகன தரிப்பிடமொன்று நிர்மானிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட செலவு ரூபா 105,231 மிகையாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டன

#### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 15,091,249 தொகையான நாநாவித கடன்பட்டோர் மீதிக்கு 3 வருட காலத்தை விஞ்சிய ரூபா 223,043 ஆன 05 மீதிகள் உள்ளடங்கப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 6,657,140 தொகையான நாநாவித கடன்கொடுத்தோர் மீதிக்கு 3 வருட காலத்தை விஞ்சிய ரூபா 150,000 ஆன 02 மீதிகள் உள்ளடங்கப்பட்டிருந்தன.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

கூட்டுத்தொகை ரூபா 20,808,431 ஆன காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பான உரித்துரிதியும் சொத்து பதிவேடும், கூட்டுத்தொகை ரூபா 73,917,955 ஆன இயந்திரமும் இயந்திர உபகரணமும் மற்றும் மோட்டார் வண்டியும் மாட்டுவண்டியும் தொடர்பாக நிலையான சொத்து பதிவேடும், ரூபா 6,087,818 ஆன வேலை கடன்பட்டோர் மற்றும் ரூபா 6,237,769 ஆன கடன் கொடுத்தோர் தொடர்பாக கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் பதிவேடுகள் அதேபோன்று மீதி உறுதிப்படுத்தல்கள் போன்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையினால் கணக்காய்வின் போது அவை திருப்திகரமாக பரிசீலனை செய்யப்பட முடியாமல் இருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

இலங்கை குடியரசின் நிதிப்பிரமானம் 261(3) க்கு இணங்காமை காசு பதிவேட்டில் மீதியொன்று இல்லாமை கூட்டுத்தொகை ரூபா 1,120,137 ஆன 07 காசோலைகள் பிரப்பிக்கப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,182,783 ஆன போதிலும் , அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,229,520 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் நிதி விளைவில் ரூபா 953,263 ஆன வளர்ச்சி காட்டப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் மீண்டுவரும் செலவு ரூபா 5,444,536 ஆல் அதிகரித்திருந்தது. அவ்வாரே மீண்டுவரும் வருமானத்தால் 80 சதவீதத்தையும் விஞ்சி மீண்டுவரும் செலவு நிலவியதனால் அபிவிருத்தி திட்டங்களை அமுல்படுத்துவதற்கு போதியளவு வருமானம் சபைக்கு இருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரண்டு ஆண்டுகளுக்குள் சபையின் வருமான உதவி, சுய சம்பாதிப்பு வருமானம் மற்றும் மொத்த மீண்டு வரும் செலவு தொடர்பான சுருக்கமான விபரமொன்று கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| வருடம் | மொத்த மீண்டுவரும் வருமானம் | வருமான உதவி | சுய சம்பாதிப்பு வருமானம் | மொத்த மீண்டுவரும் செலவு | சுய சம்பாதிப்பு வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2015 | 31,989,945 | 20,633,843 | 11,356,102 | 25,807,161 | (14,451,059) |
| 2014 | 25,592,144 | 17,226,537 | 8,365,607 | 20,362,625 | (11,997,018) |
| 2013 | 17,030,152 | 9,996,354 | 7,033,798 | 16,862,636 | (9,828,838) |

இது தொடர்பாக கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரண்டு ஆண்டுகளுக்குள் சபையின் வருமான உதவியில் வளர்ச்சியை போன்று சுய சம்பாதிப்பு வருமானத்திலும் சாதாரன அதிகரிப்பொன்று நடைப்பெற்றிருந்தது.

(ஆ) ஒவ்வொரு வருடத்திலும் மீண்டுவரும் செலவு தொடர்ந்து அதிகரிக்கும் வேகத்தில் கனிசமான தொகையினால் வளர்ச்சி அடைந்து இருந்த போதிலும் அந் நிலைமையை கட்டுப்படுத்திக் கொள்வதன் மீது சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையில் சுய சம்பாதிப்பு வருமானத்தை விஞ்சி மூன்று வருடங்களிலும் கணிசமான உயர் பெருமானங்களால் மீண்டு வரும் செலவு அதிகரித்து இருந்தது.

(ஈ) வருமான உதவி கிடைக்கப்பெறாவிடின் சபையின் சுய சம்பாதிப்பு வருமானத்தினால் எவ்விதத்திலும் மீன்டுவரும் செலவினத்தை மீள் நிரப்பிக்கொள்ளமுடியாத நிலைமை கடந்த மூன்று வருடங்களிலும் காட்டப்படுகிறது.

(உ) மேல் குறிப்பிடப்பட்ட இலக்கம் (அ) தொடக்கம் (ஈ) வரையான பந்திகளில் குறிப்பிடப்படும் விடயங்களின் பிரகாரம் வருமான நிலைமையை உயர்துவதற்கு சபையின் கவனம் செலுத்தப்பட வேண்டி உள்ளது எனவும், அதற்காக முறையான வேலைதிட்டமொன்று தயாரிக்கப்பட்டு நடைமுறைபடுத்தப்பட வேண்டியும், அவ்வாறு செய்யப்படாத போது சபையின் நிதி முகாமை தொடர்பாக சிக்கலான நிலைமை உருவாக கூடும் எனவும் அதன் ஊடாக தொடர்ந்து நிலைத்திருப்பது தொடர்பில் பாதகமான தாக்கம் ஏற்பட முடியும் எனவும் அவதானிக்கப்பட்டன.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 வீத வரி

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவை மீதி ரூபா 582,003 ஆனதுடன், ஆண்டின் பற்றுச்சீட்டிடல் ரூபா 668,326 ஆக இருந்தது. நிலுவை மீதியின் 25 சதவீதம் மற்றும் பற்றுச்சீட்டிடலின் 40 சதவீதம் அறவிடப்பட்டிருந்தன. நிலுவை வரி அறவிடல் தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 158(1)(அ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.2 நீதி மன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரை கட்டணம்

மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2015 திசெம்பர் 31 திகதியில் நீதி மன்றத் தண்டப் பணமாக ரூபா 24,650 வும் மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 7,641,937 வும் பெற வேண்டியதாக இருந்தது.

## 2.3.3 சுற்றாடல் அனுமதிப்பத்திரம்

பிரதேச சபை அதிகார எல்லைக்குள் நடாத்திச் செல்லப்படும் நிறுவனங்கள்/43 கைத்தொழில்களுக்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்கப்படாததன் காரணமாக ரூபா 189,200 ஆன வருமானம் சபைக்கு கிடைக்கப் பெறாமல் இருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல் மதிப்பீடு

மீளாய்வாண்டில் 216 அபிவிருத்தி வேலை முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டிருந்த போதும், 06 முன்மொழிவு திட்டங்கள் மாத்திரமே நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், ரூபா 1,000,000 தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தன.

### 3.2 மனித வள முகாமைத்துவம்

ஆளணி திட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையை விஞ்சி ஈடுபடுத்தப்பட்டிருந்த 11 ஊழியர்களின் பதவியை முறையாக்கிகொள்வதற்கு, 02 பதவிகளுக்கு காணப்பட்ட வெற்றிடத்தை நிறப்பிக்கொள்ள மீளாய்வாண்டின் இறுதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நள்ளாளுமையும்

### 4.1 பாதீட்டு கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் உள்ளடங்கப்பட்ட 04 வருமான விடயங்களின் அடையப்பெறாத எதிர்பார்க்கப்பட்ட வருமானம் ரூபா 775,279 வும், இன்னும் 03 வருமான விடயங்களில் பாதீட்டு எல்லைகளை விஞ்சி ரூபா 6,233,123 வருமானமும், 04 செலவின விடயங்களில் ரூபா 1,470,109 ஆன சேமிப்பும் நிலவியமை காரணமாக பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை குடியரசின் நிதிப்பிரமானங்கள் 133 மற்றும் 134 ல் குறிப்பிடப்பட்டுள்ள சட்ட ஏற்பாடுகள் மற்றும் 2014 பெப்ரவரி 24 ஆம் திகதிய இலக்க தபபா/யஹ/01/ந.ச.லே கொண்ட தெற்கு உள்ளூராட்சி ஆணையாளர் சுற்றிக்கை பிரகாம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று செய்யபட்டிருக்காத போதிலும், சபையினால் நியமிக்கப்ட்டிருந்த உள்ளகக் கணக்காய்வு அலுவலருக்கு மீளாய்வாண்டில் சம்பளம் மற்றும் கொடுப்பனவாக ரூபா 430,728 செலுத்தப்பட்டிருந்தன.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2009 யூன் 09 ஆம் திகதிய டீஎம்ஏ/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிருவப்படுவதற்கு மீளாய்வாண்டில் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**வருடாந்த பண்டக் கணிப்பீடு**

மீளாய்வாண்டில் பண்டக் கணிப்பீட்டின் போது வெளிப்படுத்தப்பட்ட பண்டக் குறைப்பாட்டின் கணக்கிடக்கூடிய பெறுமதி ரூபா 286,513 ஆனது.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) சொத்துக்கள் முகாமைத்துவம்.

(ஆ) கணக்கீடு.

(இ) வருமான நிருவாகம்.

(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு.

(உ) நிதி கட்டுப்பாடு.